செய்தி வெளியீட்டு எண்.16 நாள்: 5.1.2010

# மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் விரிவுரையாளர்கள் பணிநியமன ஆணைகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் வழங்கினார்.

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் காலியாக இருந்த விரிவுரையாளர்கள் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 130 நபர்களுக்கு இன்று (5.1.2010) மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ் விரிவுரையாளர்களாக 21 பேர்களும், ஆங்கில விரிவுரையாளர்களாக 22 பேர்களும், கணிதத்திற்கு 19 பேர்களும், இயற்பியல் பிரிவிற்கு 12 பேர்களும், வேதியியல் பிரிவிற்கு 15 பேர்களும், தாவரவியலுக்கு 6 பேர்களும், விலங்கியலுக்கு 11 பேர்களும், வரலாற்று பிரிவிற்கு 16 பேர்களும், புவியியலுக்கு 8 பேர்களும், ஆக மொத்தம் 130 பேர்களுக்கு மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் விரிவுரையாளர் பணி நியமன ஆணைகளை துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கி, வாழ்த்துக்களை தெரிவித்தார்.

2006ஆம் ஆண்டிற்கு பிறகு, கலைஞர் அரசு கடந்த மூன்றரை ஆண்டுகளில் இதுவரை 52 ஆயிரத்து 540 ஆசிரியர்களை புதிதாக நியமித்துள்ளது. கடந்த ஆட்சிக் காலத்தில் தொகுப்பு ஊதியத்தில் பணியாற்றிய 42 ஆயிரத்து 924 ஆசிரியர்களுக்கு காலமுறை ஊதியத்தை நிர்ணயித்து வழங்கியுள்ளது.

இந்நிகழ்வின்போது மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக்கல்வித்துறைச் செயலாளர் திரு.எம். குற்றாலிங்கம், ஆசிரியர் தேர்வு வாரியத்தின் தலைவர் டாக்டர் பி. இராமைய்யா, அனைவருக்கும் கல்வி திட்டத்தின் ஆலோசகர் திரு.எம்.பி. விஜயகுமார், ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் டாக்டர் ஆர். இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.